தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௲௰	மலர்
சஞ	சௌமிய, கார்த்திகை	
	1969—நவம்பர்-திசம்பர்	அ

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இளங்கோவடிகளின் இலக்கிய அறிவு

திரு. புலவர். **பி. விருத்தாசலம்,** *பி.ஏ.*

"மைதவழ் வெற்பன் மணவணி காணுமல்
கையால் புதைபெறும் கண்களும் கண்களோ"

(கலித்தொகை)

"மணவணி காணுத கண்களும் கண்களோ" என்று கபிலர் கேட்பதற்கும் "கரியவனைக் காணுத கண் என்ன கண்?" என்று இளங்கோ கேட்பதற்கும் எத்தகைய வேறுபாடும் இல்லையல்லவா?

"போதவிழ் பனிப்பொய்கை" என்று தொடங்கும் கலித்தொகை 69-ஆம் செய்யுளில் ஓர் அருமையான செய்தி சொல்லப்படுகிறது திருமண நாளிலே, ஆடைக்குள் தன் உடலையும் முகத்தையும் ஒடுக்கிக் கொண்டு, காதல் கொண்ட மான்போலத் தன்னை நோக்குகின்ற மடந்தை தனக்கு இம்மைக்கும் மறுமைக்கும் துணையாக அந்தணன் ஒருவன் அங்கியங் கடவுளை (அக்கினி பகவான்) வலஞ்செய்வதுபோல, ஆண் அன்னமானது பெண் அன்னத்தோடு பொய்கையிலே பூத்த செந்தாமரை மலரை வலம் வருகிறதாம்,

"போதவிழ் பனிப்பொய்கைப் புதுவது தளைவிட்ட
தாதுசூழ் தாமரைத் தனிமலர்ப் புறஞ்சேர்பு
காதல்கொள் வதுவைநாட் கலிங்கத்துள் ஒடுங்கிய
மாதர்கொள் மானேக்கின் மடந்தைதன் துணையாக
ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான்போல்
ஆய்தூவி அன்னந்தன் அணிநடைப் பெடையொடு
மேதகத் திரிதரூஉம் மிகுபுனல் நல்லூர!"

போதவிழ்—பெருமொட்டு மலர்ந்த பனிப்பொய்கை—குளிர்ந்த பொய்கை தனைவிட்ட—முறுக்கு ஞெகிழ்ந்த. சேர்பு—சேர்ந்து. ஆய்தூவி—அழகிய தூவி. மேதக—பெருமையோடு.

இக்கலித் தொகைச் செய்தியும், மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடக் கோவலன் கண்ணகியை மணந்து தீவலம் செய்ததாக இளங்கோ கூறும் செய்தியும் வியத்தகு ஒற்றுமைப்பட்டுள்ளன அன்றோ?

பலருங் கூடிப் பாடும்போதும், குரவைக் கூத்து ஆடும் போதும் இறுதியில் "நாடாளும் வேந்தன் ஆட்சி நெடிது வாழ்க வேந்தன் பகைவரை வென்று மேம்படுக" என வாழ்த்தி முடிப்பது பண்டை மரபு. குரவை முதலிய கூத்துக்களின் முடிவில் மன்னவனை வாழவைக்க வேண்டித் தெய்வத்தை மக்கள் வேண்டிய செய்தி முல்லைக்கலி 3. 4. 5ஆம் பாடல்களின் இறுதியில் கூறப்படுகின்றன. இவ்வாறே சிலம்பிலும் மங்கல வாழ்த்துப் பாடல் கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, வாழ்த்துக் காதை ஆகிய காதைகளின் இறுதியில் தமிழ்நாட்டு மூவேந்தர் ஆட்சியும் சிறக்க வேண்டும் என வாழ்த்துக் கூறப்படுகிறது. எனவே, முல்லைக் கலியில் கூறப்பட்ட மரபு தழுவி இளங்கோவடிகளும் குழுப் பாட்டு முடிவில் வேந்தன் வாழ்த்துக் கூறினர் எனலாம்.

கொல்லேறு தழுவிய ஆற்றல்மிகு காளையர்க்குத் தம் மகளிரை மணஞ்செய்து தருதல் ஆயர் இயல்பு. "வெள்ளை நிறமுடைய இந்தக் காளையை அடக்குபவன் முள்போன்ற கூரிய பல்லையும் அழகையும் உடைய இந்தப் பெண்ணை மனைவியாக அடையப் பெறுவான். கூரிய கொம்பையும் கறுப்பு நிறத்தையும் உடைய அந்தக் காளையின் சினத்திற்கு அஞ்சாது பாய்ந்து அடக்குபவன் அந்த அழகிய பெண்ணின் நீண்ட கூந்தலிலே துயிலைப் பெறுவான்" என்று ஆயர் அறிவித்துக் கொல்லேறுகளைக் கட்டவிழ்த்துவிடுவர். அந்தப் பெண்களுடைய காதலர் அஞ்சாது காளைமேற் பாய்ந்து அடக்கித் தத்தம் காதலியரையே மனைவியாகப் பெறுவர். இந்த ஆயர்குல வழக்கத்தை முல்லைக்கலி தெளிவுற விளக்கிக் காட்டும். எடுத்துக்காட்டாக, "மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்" எனத் தொடங்கும் 104ஆம் கலித் தொகைப் பாட்டின் கீழ்வரும் பகுதியைக் கூறலாம்.

"அவ்வழி முள்ளெயிற்று ஏஎர் இவளைப் பெறுமிதோர்
வெள்ளேற்று எருத்தடங்கு வான்
ஒள்ளிழை வாருறு கூந்தல் துயில்பெறும் வைமருப்பின்
காரி கதனஞ்சான் கொள்பவன்"

இந்தக் கலித்தொகைப் பகுதியோடு சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையுள் 'கொளு' என்னும் தலைப்பில் வரும்,

"காரி கதனஞ்சான் பாய்ந்தானைக் காமுறுமிவ்
வேரி மலர்க்கோதை யாள்
தூநிற வெள்ளை அடர்த்தாற் குரியளிப்
பூவைப் புதுமல ராள்"

என்னும் பகுதியை ஒப்பிட்டுச் சுவைக்கலாம்.

கானல் வரியில் மாதவி கோவலனிடம் யாழை நீட்டுவதற்கு முன்னால் யாழ் நன்னிலையில் உள்ளதா என்று ஆராய்ந்தாளாம். அவள் கைவிரல்கள் அழகிய காந்தள் மலரிதழ்கள் போல் விளங்கினவாம். அவ்விரல்களில் மரகதம் வைத்து இழைக்கப்பட்ட மோதிரங்களை அணிந்திருந்தாளாம். மோதிரத்தோடு கைவிரல்கள் விளங்கிய காட்சி தேன் உண்பதற்காக வண்டுகள் வந்து அமர்ந்திருந்த காந்தள் மலர் போன்ற காட்சியை நல்கிற்று தன் கைவிரல்களில் அணிந்திருந்த மோதிரங்களைக்கொண்டு மாதவி யாழ் நரம்புகளை மீட்ட யாழிலிருந்து ஓசை கிளம்பிற்று. அவ்வோசை வண்டுகள் பாடுவனபோல் இருந்ததாம் இதனை "மரகதமணித் தாள் செறிந்த மணிக் காந்தள் மெல் விரல்கள் பயிர் வண்டின் கிளைபோலப் பண்ணரம்பின் மிசைப்படர" (கானல்வரி 10–11) என்னும் பகுதி விளக்கும்.

பெண்கள் கைகளுக்குக் காந்தள் மலரையும், கைவிரல்களில் அணிந்த மரகதக் கல் மோதிரங்களுக்குக் காந்தள் மலர் மொட்டின்மேல் அமர்ந்திருக்கும் வண்டுகளையும் உவமைகளாக இளங்கோவடிகள் கூறியதுபோலவே குறிஞ்சிக் கலியில் கபிலரும் கூறுகிருர்.

"தகையவர் கைச்செறிந்த தாள்போலக் காந்தள்
முகையின்மேல் தும்பி யிருக்கும் - பகையெனின்
கூற்றம் வரினும் தொலையான்றன் நட்டார்க்குத்
தோற்றலை நாணுதோன் குன்று." (கலி 43)

தகையவர் - அழகிய மகளிர் தாள் – மோதிரம்.

திருமணம் நடைபெறு முன்பு-களவுக்காலத்தில் தலைவியையும் தோழியையும் தலைவன் கெஞ்சுவான்; கையிலே தழையுடையையும் பூமாலைகளையும் கையுறையாகக் கொண்டு அதனை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிப் பின்தொடர்வான்; வஞ்சனையில்லாத இனிய சொற்களைப் பேசித் தலைவியைக் கொஞ்சுவான்; மெல்ல மெல்லத் தலைவியைத் தழுவி மகிழ்வான்; ஒருகாலத்தும் உன்னை விட்டுப் பிரியேன் என்பான்; மலரைச் சுற்றிச் சுற்றி வரும் வண்டு போலத் தலைவியைச் சுற்றிச் சுற்றி வட்டமிடுவான். ஆனால், திருமணம் ஆன பின்போ கதை தலைகீழாக மாறிவிடும். தலைவன், 'ஈதலும் துய்த்தலும் பொருள் இல்லாதவர்க்கு இல்லையாதலின் பொருளீட்ட எண்ணி நீரும் நிழலுமற்ற பாலைகளையும், காடு மலைகளையும் கடந்து செல்லுவான். தலைவியோ 'போகாதே போகாதே" என்பாள் "கட்டி கட்டியாகப் பிட்டுச் சாப்பிடுவதைக் கஞ்சியாகக் கரைத்தாவது சாப்பிடலாம், என்பாள். "ஒரே ஆடையை இரண்டு துண்டாக்கி ஆணும் பெண்ணும் உடுத்தும் நிலைமை வந்தாலும், கணவனும் மனைவியும் பிரி-யாது ஒன்றுபட்டு வாழும் வாழ்க்கையே நல்வாழ்க்கை" என்பாள். மொத்தத்தில் "பிரிவுத் துயர் பொறுக்க முடியாது; பிரிந்து செல்ல வேண்டா" என்று தலைவி தலைவனைக் கெஞ்சுவாள். தலைவன் பிரிந்து சென்ற பின்னர் "தலைவன் பொய் பேசுபவன்; பிரியேன் என்று சொல்லி நம்மை ஏமாற்றித் தலைவன் கூடிக் களித்த நாளிலே அவன் சொல்வன எல்லாம் பொய் என்று தெரியாமல் போயிற்றே; நாம் ஏமாறி விட்டோமே" என்று பலவாறு எண்ணி எண்ணி வருந்துவாள்.

"செவ்விய தீவிய சொல்லி அவற்றொடு
பைய முயங்கிய அஞ்ஞான்று அவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோ மற்று ஐய"

(கலித்தொகை 19)

இந்தப் பாலைக்கலிச் செய்யுட் கருத்தைக் கருப்பொருளாகக் கொண்டே "கரியமலர்"; "காதலராகி" என்று தொடங்கும் இரண்டு கானல் வரிப் பாடல்களும் பாடப்பட்டுள்ளன. இதோ முழுப் பாடல்களையுமே பார்ப்போமே.

"கரியமலர் நெடுங்கட் காரிகைமுன் கடற்றெய்வங் [காட்டிக் காட்டி
அரியசூள் பொய்த்தார் அறனிலரென் றேழையம் யாங் [கறிகோ மைய
விரிகதிர் வெண்மதியும் மீன்கணமுமா மென்றே [விளங்கும் வெள்ளைப்
புரியவளையும் முத்துங்கண் டாம்பல் பொதியவிழ்க்கும் [புகாரே யெம்மூர்"

"காதலராகிக் கழிக்கானற் கையுறைகொண் டெம்பின் [வந்தார்
ஏதிலர் தாமாகி யாமிரப்ப நிற்பதையாங் கறிகோமைய
மாதரார் கண்ணும் மதிநிழல்நீர் இணைகொண்டு மலர்ந்த [நீலப்
போதுமறியாது வண்டூச லாடும் புகாரே யெம்மூர்"

பரத்தையிடம் சென்று வந்த தலைவன் ஒருவன் தலைவியிடம் அகப்பட்டுக்கொண்டான். அவள் அவனது தவருன பரத்தமை ஒழுக்கத்தைச்சாடினுள். அவனே நிலைமையைச் சமாளிக்க "நான் இந்நேரம் வரையில் வையைப் புனல் ஆடி வந்தேன்; வேறெங்கும் செல்லவில்லை" என்று ஒரு பொய் சொன்னுன். அவளோ விடுவதாய் இல்லை "ஆமாம் உண்மைதான் நீ வையைப் புனல்தான் ஆடி வந்திருப்பாய்; என்னிடம் பொய்யா சொல்லப் போகிருய்? நெளிகளோடு கூடிய கூந்தல் அறல் மணலாக, அழகிய மை தீட்டிய பெரிய கண்கள் கெண்டை மீன்களாக, கரிய பூக்கள் மலர்ந்து கமழ்கின்ற சோலையிடத்தே நாணுகிய அணையை முறித்துப் பலரும் காணும்படி பகற்பொழுதிலே வந்த அந்தப் புதுப் புனலைப் பாணனைத் தெப்பமாகக்கொண்டு மாலை நேரத்தில் ஆடி மகிழ்ந்தாய் இல்லையா? என்று கேட்டாள்.

'நீணீர் நெறிகதுப்பு வாரும் அறலாக
மாணெழில் உண்கண் பிறழும் கயலாகக்
கார்மலர் வேய்ந்த கமழ்பூம் பரப்பாகம்
நாணுச் சிறையழித்து நன்பகல் வந்தவவ்
வியாணர்ப் புதுப்புனல் ஆடினுய் முன்மாலைப்
பாணன் புணையாகப் புக்கு" (கலித்தொகை 98 14-19)

இந்தக் கலித்தொகைப் பாட்டுக் கருத்தின் விரிவாகவே 'வையை ஆற்றைப் பொய்யாக் குலக்கொடி" எனப்

புறஞ்சேரி யிறுத்த காதையின் இறுதியில் இளங்கோவடிகள் கூறினர்.

கலித்தொகை வையை ஆருகிய பெண்ணுக்குக்கண் கருங்கயல்; கூந்தல் கருமணல் என இரண்டே இரண்டு உறுப்புக்களைத்தான் சொல்கிறது ஆனல் சிலப்பதிகாரமோ வையை என்னும் பாண்டியரது பொய்யாக் குலக்கொடிக்கு ஆற்றின் கரை அல்குல்; எதிர் எதிர் ஓங்கிய மணல் மேடுகள் (துருத்திகள்) முலைகள்; நீரில் ஓடிவரும் முண்முருக்கம் பூக்கள் இதழ்கள்; முல்லைப் பூக்கள் பற்கள்; கயல்கள் கண்கள்; அறல் கூந்தல் எனப் பலவுறுப்புக்களைக் கவினுறப் புனைந்து கூறுகிறது ஆற்றல் மிகுந்த வணிகர்கள் தாம் வாணிகத்தில் போட்ட முதலை ஒன்றை நூருகப் பெருக்குதல் போல இளங்கோவடிகளும் கலித்தொகையில் தாம் கண்ட ஓர் உருவகத்தை மேலும் அழகுறப் பலபடியாக விரித்துக் கூறுகின்ற திறத்தை இப்பகுதி வாயிலாக நாம் உணர்கிருேம் அல்லவா?

தலைவன் இளவேனிற் பருவத்தில் வருவதாக உறுதி கூறிப் பொருளீட்டப் பிரிந்தான் அதனுல் காதலி மேனி மெலிந்தது. அழகு குலைந்தது. தலைவியின் இந்நிலை வெறும் வாயை மெல்கின்ற ஊர்ப் பெண்டிர் வாய்க்குத் தீனி கிடைத் ததுபோல—அவல் கிடைத்ததுபோல ஆயிற்று; ஆகவே, பெண்டிர் கூட்டம் கூட்டமாகக் கூடிக்கொண்டு அவளைத் தூற்றத் தொடங்கிவிட்டனர் அதுவரையில்—தலைவன் பிரிகிற வரையில்—அவள் சாயலுக்குத் தோற்று வருந்திய மயில்கள்—தலைவன் பிரிந்து சென்றதும் அவளழகை வென்று விட்டன. அதனுல் மயில்கள் மலைமேல் மகிழ்ச்சியோடு தோகை விரித்து ஆடுகின்றன. இவ்வாறு மயிலும் பெண்டிரும் ஏளனம் செய்யும் வகையில்—தலைவியின் அழகு கெடும் வகையில் பிரிந்து சென்ற தலைவர்-முருகப்பெருமானுக்கு—பகைவரை மாயஞ் செய்து நேரே நின்று போரிட்டு வென்று கொல்லும் கடவுளுக்கு—கடல் நடுவே முளைத்த சூரபன் மனுகிய மாமரத்தை அழித்த செவ்விய வேலையுடைய செவ்வேளுக்குத் திருப்பரங்குன்றத்தில் இளவேனிற் பருவத்தில் விளையாடும் விளையாட்டையும் விரும்பாது போவாரோ? உறுதியாக விரும்பி வருவர் என்று நம்பிக்கை தெரிவிக்கிருள் தோழி ஒருத்தி,

"கன்மிசை மயிலாடக் கறங்கியூர் அலர்தூற்றத்
தொன்னலம் நனிசாய நம்மையோ மறந்தைக்க
ஒன்னுதார்க் கடந்தடூஉம் உரவுநீர். மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும்
[விரும்பார்கொல்"
(கலித்தொகை 27: 13–16)

முருகப் பெருமானைக் குறிக்கும் இறுதி இரண்டடிகளில் இறுதி அடிமட்டும் சிலப்பதிகாரத்தில் வாழ்த்துக் காதையில் செங்குட்டுவனுக்குக் கண்ணகியார் கடவுள் நல்லணி காட்டியது என்னுந் தலைப்பில் உள்ள பாடலில் அப்படியே எடுத்தாளப்படுகிறது அந்தப் பாடல் இதுதான்.

"தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந் தாயினான் நானவன் றன்மகள்
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டுயானகலேன்
என்னோடுந் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம்"

இதிலிருந்து 'வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டு' என்னும் கலித்தொகைத் தொடர் நம்முடைய நெஞ்சத்தைக் கொள்ளைகொண்டது போலவே இளங்கோவின் உள்ளத்தையும் கொள்ளைகொண்டது என்பது விளங்குகின்றது அல்லவா?

"பல்வளம் பகர்பூட்டும்" என்று தொடங்கும் கலித்தொகை 2 ஆம் பாடலில் கீழ்வருந் தாழிசை ஒன்று காணப்படுகிறது.

"கிளிபுரை கிளவியாய் நின்னடிக் கெளியவோ
தளியுறுபு அறியாவே காடெனக் கூறுவீர்
வளியினும் வரைநில்லா வாழுநா ளும்மாகத்
தளியென உடையேன்யான் அவலங்கொண்டழிவலோ"

இப்பாடலைக் கணவனை யிழந்து வாடும் கண்ணகியின்

"நறைமலி வியன்மார்பின் நண்பனை இழந்தேங்கித்
துறைபல திறமூழ்கித் துயருறும் மகளிரைப்போல்
மறனொடு திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப
அறனெனும் மடவோய்யான் அவலங்கொண்
[டழிவலோ"

என்னும் புலம்புரையோடு ஒப்பிட்டால் ஓர் உண்மை புலனாகும். கலித்தொகைப் பாட்டின் ஓசைநயமும் "யான் அவலங்கொண் டழிவலோ" என்னும் தொடரும் இளங்கோ பாட்டில் இழையோடியிருப்பது தெளிவாகிறது.

தமிழ் மொழியின் தொல்வரலாறு

டாக்டர். செ. வை. சண்முகம், எம்.ஏ., .எம்.லிட்., பிஎச்.டி.,
டிப். இன். லிங்., அண்ணுமலைப் பல்கலைக்கழகம்

1. முன்னுரை :

ஒரு மொழி அம்மொழிக் குடும்பத்தின் தொன்மொழி (Proto-language) யிலிருந்து எவ்வாறு வளர்ந்து தனிமொழி யாக மாறியது என்பதே அதனுடைய தொல் வரலாறு (pre-history) ஆகும் அம்மொழியின் பழைய எழுத்துச் சான்று கிடைக்கும் காலத்திற்கும் தொன்மொழியின் காலத் திற்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் அனைத்தும் தொல்வரலாற்றில் அடங்கும்.

2. தமிழும் தென்திராவிடமும் :

தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழி என்பது அனைவரும் அறிந்ததே. திராவிட மொழிக் குடும்பம் மூன்று பெரும் உட்பிரிவுகளை (sub groups) கொண்டது. அவை தென்திராவிடம் (South Dravidiam), நடுத்திராவிடம் (Central Dravidiam), வடத்திராவிடம் (North Dravidiam) என்று அழைக்கப்பெறும் தமிழ் தென் திராவிடத்தைச்சார்ந்தது மலை யாளம், கோடா, தோடா, குடகு, கன்னடம் ஆகிய பிற மொழி கள் தென்திராவிடத்தைச் சார்ந்தவை துளு மொழி எந்த உட் பிரிவைச் சார்ந்தது என்பது பற்றித் திராவிட மொழியியல் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது, எனினும் தென்திராவிட மொழிகளுக்குரிய பல பண்புகள் காணப்படுவ தால் நாம் துளுவைத் தென்திராவிட மொழிகளோடு சேர்த்தே

235-ஆம் பக்கத் தொடர்ச்சி

இதுவரையிற் கூறப்பட்ட பல்வேறு சான்றுகளால் கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகையை இளங்கோவடி களும் கசடறக் கற்றுணர்ந்து இன்பம் உற்றார் என்பதையும், "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்னும் சான்றோர் இயல்புப்படி, தாம் கலித்தொகையில் கற்றுணர்ந்த அருமையான செய்திகளையும், தொடர்களையும் ஓசைகளையும் தம் பெருங்காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் ஏற்ற இடங் களில் போற்றத்தக்க வகையில் எடுத்தாண்டு பெருவெற்றி பெற்றுள்ளார் என்பதையும் உணரலாம்.

(தொடரும்)

பேசுவோம். மேலே குறிப்பிட்ட மொழிகள் அனைத்தும் தென்னிந்தியாவில் பேசப்படுவதோடு பல பொதுவான மாற்றங்களை (common inrovations)க் கொண்டிருப்பதே ஒரு உட்பிரிவாகக் கருதுவதற்குக் காரணமாகும். சான்றாக, மொழி முதலில் வரும் சகர மெய் தென்திராவிடமொழிச் சொற்களில் மறைந்துவிட்டது. ஆனால் அச்சகரம் நடுத்திராவிட மொழிகளிலும் வடதிராவிட மொழிகளிலும் உள்ளது ஆறு, ஏர், ஐந்து ஆகிய சொற்கள் தொல்திராவிடத்தில் முறையே *சாறு, *சேர், * சைந்து என்றே காணப்பட்டிருக்கவேண்டும் என்று பர்ரோ (Burrow) என்ற அறிஞர் கூறியுள்ளார். பழந்தமிழில் (Old Tamil) காணப்படும் சான்றோர்-ஆன்றோர். சிறகு-இறகு என்ற உறழ்ச்சி (Free variation) இம்மாற்றத்தின் விளைவால் ஏற்பட்டதாகும்.

தொல் திராவிடத்தில் நான்கு பால்களை (Genders) (ஆண் ஒருமை, ஆணல் ஒருமை (Non-Masculine), பலர்பால், பலவின்பால்) இருந்திருக்கவேண்டும் என்பது ஒப்பிலக்கண ஆசிரியர் கருத்து [2] தோடா தவிர ஏனைய தென் திராவிட மொழிகளில் தமிழில் உள்ளதைப் போன்றே ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய ஐந்து பால்களும் காணப்படுவது இம்மொழிகள் அனைத்திலும் ஏற்பட்ட ஒரு பொது மாற்றத்தாலேயே ஆகும்.

நடுத்திராவிடத்திலும் வடத்திராவிடத்திலும் அடிச்சொற்கள் மட்டும் இருக்க தென் திராவிடத்திலும் அவ்வடிச் சொற்கள் பால்காட்டும் விகுதியோடு சில சொற்கள் காணப்படுகின்றன. * குட்டன், * கூனன், * செவிடன் (இதிலிருந்துதான் தமிழில் செவிடன் என்ற சொல் வந்தது). மூக்கன், செல்வன் ஆகிய சொற்களில் ஆண்பால் விகுதியும், குருடி, செவிடி என்ற சொற்களில் பெண்பால் விகுதியும் தொல் தென் திராவிடத்தில் (Proto South Dravidiam) சேர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

3. தென் திராவிடத்தின் வளர்ச்சி:

தொல் தென்திராவிடத்திலிருந்து எல்லா மொழிகளும் காலப்போக்கில் பிரியலாயின. முதலில் துளுவும், அடுத்துக் கன்னடமும் பின்னர் குடகும் அதன்பின்னர் கோடாவும் தோடாவும் ஒருபக்கமும்; தமிழும் மலையாளமும் மற்றொரு பக்கமும் பிரிந்து வளரலாயின.[3]



தமிழ் ஒரு தென் திராவிட மொழியானதால் தொல்தென் திராவிடத்தில் ஏற்பட்ட எல்லா மாற்றங்களும் அதில் உள்ளன. அத்துடன் தமிழும் மலையாளமும் கடைசியாகப் பிரிந்ததால் பிற தென் திராவிட மொழிகளில் உள்ள சில பண்பும் தமிழில் உண்டு. அவற்றை ஒவ்வொன்றாகக் கீழே காண்போம்.

தொல் தென் திராவிடத்திலிருந்து முதலில் துளு பிரிந்ததால் அம் மொழி ஏனைய தென் திராவிட மொழிகளோடு ஒற்றுமை மிகுதியாய்க் காணப்படவில்லை.

4. கன்னடமும் தமிழும் :

தொல் திராவிடத்திலேயே மகர ஈற்று அஃறிணை சொற்கள் அத்துச்சாரியை (tt என்பதுதான் சரி) ஆறாம் வேற்றுமைக்கு முன்னர் மட்டுமே சேர்க்கப்பட்டிருக்கவேண்டும் [4] அவ்வாறே துளுவிலும் உள்ளது. ஆனால் கன்னடத்தில் ஆறாம் வேற்றுமைக்கு முன்னர் மட்டுமன்றி, மூன்று, ஏழு வேற்றுமை முன்னரும் அந்தச் சாரியை பயன் படுத்தப்படுகிறது. தமிழிலும் பிற மொழிகளிலும் இந்த இரு வேற்றுமை முன்னும் சாரியை பயன்படுத்துவதால் கன்னடம், குடகு, கோடா, தோடா, தமிழ், மலையாளம் ஆகிய இவை ஒன்றாக இருந்த காலத்தில் அஃதாவது துளுவின் பிரிவிற்குப்

பின்னரும் கன்னடத்தின் பிரிவிற்கு முன்னரும் இம்மாற்றம் ஏற்பட்டிருக்கவேண்டும்.

	துளு	கன்னடம்	தமிழ்
முதல் வேற்றுமை	மர	மர	மரம்
ஆறும் ,,	மரத	மரத	மரத்து/மரத்தது
ஏழாம் ,,		மரதல்வி	மரத்தில்
மூன்றும் ,,		மரதிந்த	மரத்தின்/மரத்திஞல்
நான்காம் ,,		மரக்கு	மரத்திற்கு
இரண்டாம் ,,		மரலன்னு	மரத்தை

பலவின்பால் சொற்களுக்குப் பிறகு அகரச் சாரியை துளு, தெலுங்கு, கொண்டா, பிராகூயி ஆகிய மொழிகளில் காணப் படுவதால் அந்தச் சாரியை தொல்திராவிடத்திலும் இருந் திருக்கவேணடும் * ஆஞல் கன்னடம், தமிழ் ஆகிய தென் திராவிட மொழிகளில் காணப்படாமையால் அந்த சாரியை மறைந்ததாகக் கொள்ளவேண்டும். இம்மறைவு (loss) ஒரு மாற்றமே. இதுவும் கன்னடம் பிரியுமுன்னரே ஏற்பட்டிருக்க வேண்டும்.

அஃறிணை பன்மை விகுதிகளாக *கள், *ள் என்ற இரு விகுதியும் இருந்திருக்க வேண்டும் என்பது ஒப்பிலக்கண முடிவு.[6] தென்திராவிடத்தில் துளுவில் மட்டுமே இவ்விரு விகுதிகளும் பாதுகாக்கப் பெற்றுள்ளன. ஏனைய தென்திரா விட மொழிகளில் ளகர விகுதி மறைந்தது. கன்னடம் உட் பட்ட தென்திராவிட மொழிகளில் ஏற்பட்ட ஒரு பொது மாற் றத்தாலேயே ஆகும்.

காதலன், கிழவன், பார்ப்பன், புலையன் ஆகிய சொற் களில் ஆண்பால் விகுதியும் புலைத்தி, கள்ளி, அரசி, கூனி போன்ற சொற்களில் பெண்பால் விகுதியும் காணப்படுவது கன்னடத்திலும் தமிழிலும் ஏற்பட்ட மற்றுமொரு பொதுவான மாற்றத்தாலேயே ஆகும்.

5. குடகும் தமிழும்

குடகு கன்னடத்தோடு நெருங்கிய தொடர்புடையது; கன்னடமும் குடகும் ஒரு மொழியாக ஒரு காலத்தில் இருந்து பின்னர் பிரிந்திருக்கவேண்டும் என்று கருதினர். ஆஞல் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எமனேவ் என்ற அறிஞர்

"தமிழ், மலையாளம் போன்ற மொழிகளோடு நெருங்கிய தொடர்புடையது என்றும் கன்னடம் பிரிந்த பிறகு தமிழ், மலையாளம், கோடா, தோடா, குடகு ஆகிய மொழிகள் கொஞ்ச காலம் இருந்து பிரிந்திருக்கவேண்டும் என்றும், கன்னடமும் குடகும் ஒன்றுக்கொன்று அருகாமையில் இருப்பதால் சில பொதுக் கூறுகள் இருப்பதாகவும் கூறியுள்ளார்."[7] இவ்வுண்மை கீழ் வரும் செய்திகளால் வலியுறுவதைக் காணலாம்.

முன்னர் கன்னடத்தில் இரண்டாம் வேற்றுமைக்கு முன்னர் மகர ஈற்று அஃறிணைச் சொற்கள் சாரியை ஏற்ப தில்லை என்று சொன்னோம். குடகிலும் பிற மொழிகளிலும் இரண்டாம் வேற்றுமை முன்னர் அந்தப் பெயர்ச் சொற்கள் சாரியை பெறுவது இம்மொழிகள் (குடகு, கோடா, தோடா, மலையாளம், தமிழ்) ஒன்ருக இருந்தக் காலத்தில் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். சில வினைச் சொற்களில் தன்வினை பிற வினை வேறுபாடு காலஇடை நிலைகளாலும் பிற உருபுகளாலும் அறியமுடியும். சான்ருக பிரி முறி போன்ற வினைச் சொற்கள் பிரிந்தான், முறிந்தான் என்னும்போது தன்வினையாகவும்; பிரித்தான், முறித்தான் என்னும்போது பிறவினையாகவும் பயன்படுகின்றன இத்தகைய மாற்றம் கன்னடத்தில் காணப்படாததால் குடகும் பிற தென் திராவிட மொழிகளும் ஒன்ருக இருந்த காலத்தில் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று எண்ணவேண்டியுள்ளது.

'பொறு' என்ற வினைச் சொல்லின் இறந்த கால வடிவம் 'பொற்று' என்று கோடா, தோடா, கன்னடம் ஆகிய மொழிகளிலும் பொறுத்து என்பது தமிழ், மலையாளம், கோடா, தோடா (கோடாவிலும், தோடாவிலும் பொற்று என்ற வடிவம் சிறிது வேறுபட்ட பொருளில் வழங்குகின்றது). குடகு ஆகிய மொழிகளிலும் வழங்குவதால் 'பொற்று' என்ற வினையெச்ச வடிவமே பழைமை உடையதாக இருக்கலாம்.[9] ஏனெனில் குற்றெழுத்தை அடுத்துவரும் உகரம் ஏறிய வல்லினம் ஒன்றை உடைய வினைச் சொற்கள் (நடு என்ற வினைச் சொல் நட்டு என்று வருதல் போன்று) ஈற்று மெய் இரட்டித்தே இறந்த காலம் உணர்த்துவது பெரும்பான்மையாகக் காணப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே 'பொறுத்து' வடிவம் சிறிது பிற்கால வடிவமாக இருக்கலாம். மேலும் நெருங்கிய

தொடர்புடைய மொழிகளில் மட்டும் காணப்படுவதாலும் இவ் வடிவம் கொடு-கொடுத்து என்பது போன்று ஒப்புமையாக்கத் தால் (Analogy) ஏற்பட்டிருக்கலாம் இவ்வாறே 'உடு' என்ற வினைச் சொல் உட்டு என்று கன்னடத்திலும் உடுத்து என்று தமிழிலும் குடகிலும் காணப்படுவதும் அறியத்தக்கதாம்

எண்ணுப் பெயர் எட்டைக் குறிக்க கன்னடத்தில் எண்டு (*entu*) என்பதும், ஏனைய தென்திராவிட மொழிகளில் எட்டும் (*ettu*) பயன்படுத்தப்பட்டுவருகின்றன. எண் என்பது அடிச் சொல்லாகப் பயன்படுத்தப்படுவதால் தொன்மொழியின் வடி வம் *எண்ட்டு (*enttu*) என்று இருந்தே ஒரு டகரம் கெட்டு கன்னடத்தில் எண்டு என்ற வடிவமும் ணகரம் கெட்டு தமிழ், மலையாளம், கோடா, தோடா, குடகு ஆகிய மொழிகளில் எட்டு என்ற வடிவமும் தோன்றியிருக்கமுடியும்

6. தமிழும் கோடா தோடாவும்:

நான்காம் வேற்றுமை உருபாகிய 'கு'விற்கு முன்னமும் மகர ஈற்று அஃறிணைப் பெயர்ச் சொற்கள் அத்துச்சாரியை சேர்க்கும் வழக்கம் குடகு பிரிந்து தமிழ், மலையாளம், கோடா, தோடா ஆகிய நான்கு மொழிகளும் ஒன்ருக இருந்த காலத் தில் ஏற்பட்டிருக்கவேண்டும்.

	குடகு	கோடா	தமிழ்/மலையாளம்
மரம்	மரக்கெ	மென்த்க்	மரத்துக்கு

இதனல் தொல்காப்பியத்தில் ஆசிரியம்-ஆசிரியக்கு, குற்றியலுகரம்-குற்றியலுகரக்கு; வேழம்-வேழக்கு என்று மூன்று சொற்கள் அத்துச் சாரியை பெருமல் வந்துள்ளன. இவ்வாறே திருக்குறள் (வையம்-வையக்கு நிலம்-நிலக்கு), சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களிலும் இம்முறையில் சில சொற்கள் உள்ளமை அறியத்தக்கது.

தொல்திராவிடத்தில் நான்கு என்ற எண்ணைக் குறிக்க *நால்கு என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும் பழந்தமிழில் பெரும்பாணுற்றுப் படையிலும் (489) அக நானூற்றிலும் (104.6) நால்கு வந்துள்ளது. லகரம் னகர மாக மாறிய மாற்றம் இந்நான்கு ஒன்ருக இருந்த காலத்தில் ஏற்பட்டிருக்கவேண்டும்.[10] ஏனெனில் முன்னும் பின்னும் உள்ள எண்ணுப் பெயர்கள் மெல்லெழுத்தும் வல்லெழுத்தும் ஈருகக் கொண்டிருப்பது காரணமாக இருக்கலாம்

*குயவன், *குயத்தி, *தட்டான் ஆகிய சொற்களிலும் பால்காட்டும் விகுதி சேர்க்கப்பட்டன. பிற தென்திராவிட மொழிகளில் காணப்படாது தமிழ் மலையாளம் கோடா தோடா ஆகிய நான்கு மொழியில் மட்டும் உள்ளதால் இதுவும் இம்மொழிகளுக்கே உரிய மாற்றமாகும்.

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு மொழிகளிலும் தமிழ். மலையாளம், கோடா, ஆகிய மூன்று மொழிகள் மட்டும் நெருங்கிய தொடர்புடையன.

பழந்தமிழில் குவ என்று இரண்டு எதிர்கால விகுதி வருவது (உண்குவேன், செய்குவேன்) போன்று கோடா விலும் காணப்படுவதால் இம்மூன்று மொழிகளில் ஏற்பட்ட ஒரு புது மாற்றம் என்பர் பேராசிரியர் எமனோ[11]. அவ்வாறே செய்யாதி என்ற வாய்பாடு ஏவல் எதிர்மறையாகப் பயன்படுத்தப்படுவதும் இம்மூன்று மொழிக்கே உரிய மற்றொரு சிறப்புப் பண்பாகும். குள்ளன், திருடன், பறையன், முடவன், குள்ளி, திருடி, பறைச்சி ஆகிய சொற்களில் பால் காட்டும் விகுதிகள் சேர்க்கப்பட்டன. இம்மூன்று மொழி களும் ஒன்றாக இருந்த காலத்தில் ஏற்பட்ட மாற்றமாகும்.

7 தமிழும் மலையாளமும்:

தமிழும் மலையாளமும் மிக நெருங்கிய தொடர்புடைய காரணத்தினால்தான் திராவிட ஒப்பிலக்கண ஆராய்ச்சியில் மலையாளம்பற்றி சில ஆராய்ச்சியாளர்கள் தனியே பேசுவது இல்லை. காரணம் இவ்விரு மொழிகளிலும் பழைமைக் கூறுகள் பல பாதுகாக்கப்பட்டிருப்பதும் பல பொது மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதும் ஆகும். இவ்விரு மொழிகளிலும் ஏற்பட்ட மாற்றங்கள் சில தொல்தமிழ் மலையாளக் காலத்திலும் (Proto Tamil-Malayalamperiod) சில வரலாற்றுக் காலத் திலும் ஏற்பட்டுள்ளன. தமிழின் தொல் வரலாறு அறிய தொல் தமிழ் மலையாள காலத்தில் ஏற்பட்ட மாற்றமே பயன் படுவதால் அவை பற்றி மட்டும் ஈண்டு குறிப்பிடப்படும்

தொல்திராவிடத்தில் ககரமெய் இ, ஈ, எ, ஏ, ஆகிய நான்கு உயிர்களை அடுத்து வந்து அதற்குப் பின்னர் ட, ண, ஆகிய இரு நாமடி ஒலிகள் (Retroflex) வராவிடில் அந்த ககரமெய் சகரமெய்யாக தமிழிலும் மலையாளத்திலும் மாறியுள்ளது [12]

*கெலி	—	செலி	*கிரி	—	சிரி

அடிச்சொல்லில் எகரம் அல்லது ஒகரம் இருந்து அது அகர விகுதியுடன் சேரும்போது முறையே இகரமாகவும் உகரமாகவும் மாறுதல் தமிழுக்கும் மலையாளத்திற்கும் பொதுவானதாகும்[13]

கொண்டல் (கொண்–தல்)	—	*கொண்–அக்கு	—	குணக்கு
ஒடு		*ஒட்–அன்		உடன்
செம்		*செம்–அ		சிவ
பெறு		*பெற்–அ		பிற

தொல்திராவிடத்தில் மூக்கொலிக்குப் பிறகு இரண்டு ஒலிப்பிலா வல்லொலிகள் (Voiceless plosives) சேர்ந்து இருந்திருக்கவேண்டும் என்றும் அதில் ஒரு வல்லொலி மட்டும் கன்னடத்திலும் தெலுங்கிலும் மறைந்துவிட்டது; தமிழிலும் மலையாளத்திலும் மூக்கொலி மறைந்துவிட்டது என்று திரு. குமரசாமிராசா அவர்கள் கண்டு கூறியுள்ளார்கள்.[14]

மொழிக்கு நடுவில் இரண்டு உயிர்களுக்கு இடையே சகரமெய் ஒரே வழி யகரமெய்யாக மாறும் மாற்றம் இவ்விரு மொழிகளில் மட்டுமே காணப்படுவதாகும்

		பழந்தமிழ்
*உசிர்	—	உயிர்
*வசிறு	—	வயிறு
*பெசர்	—	பெயர்

மொழிக்கு முதலில் வரும் மகரமெய் வகரமெய்யாக மாறுவதும் சில சொற்களில் மட்டுமே காணப்படினும் இவ்விரு மொழிகள் தவிர ஏனையவற்றில் காணப்படவில்லை

மண்ணன்	—	வண்ணன்
மதுவை	—	வதுவை

தொண்ணூறு, தொள்ளாயிரம் என்ற இரு எண்ணுப் பெயர் வடிவங்களும் தமிழிலும் மலையாளத்திலும் மட்டுமே உள்ளன. ஏனைய திராவிட மொழிகளை ஒப்புநோக்கும்போது அவை அவ்விரு மொழிக்கும் பொதுவான மாற்றத்தால் உண்டானவை என்று கருதவேண்டியுள்ளது.[15]

தோடா	—	ஒன்பது '90'	வின்பொநூற் '900'
கன்னடம்	—	தொம்பத்து	ஒம்பய் நூறு
குடகு	—	தொம்பதி	ஒம்பய் நூறு
துளு	—	சொண்ப	

தெலுங்கு	— தொம்பதி/தொம்மை	தொம்மநூறு
கோண்ட	— தொம்மை	
தமிழ் & மலையாளம்	— தொண்ணூறு	தொள்ளாயிரம்

ஆயன், வலையன் பார்ப்பான், வண்ணான் ஆகிய சொற்களில் ஆண்பால் விகுதியும் ஆய்த்தி, வலைத்தி, வண்ணாத்தி, பாட்டி, சிறுமி ஆகியவற்றில் பெண்பால் விகுதியும் இவ்விரு மொழிகளில் மட்டுமே உள்ள புதுமையாகும்.[16]

8. தமிழின் தனிமாற்றங்கள்

தொல்தமிழ் மலையாள காலத்திற்குப் பிறகு தமிழில் மட்டும் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறே மலையாளத்தில் மட்டும் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். அவைபற்றி இப்பொழுது ஒன்றும் தெரியவில்லை.

மொழிக்கு முதலில் ஞகரமெய் நகரமெய்யாக மாறுவதும் பழந்தமிழ் காலத்திற்கு முன்னரே அதாவது தொல் தமிழிலேயே ஏற்பட்டிருக்கவேண்டும் ஏனெனில் தொல் திராவிடத்தில் ஞகர முதன் மொழியாக உள்ள சொற்களுள் பதினான்கு சொற்களில் தமிழ் நகர மெய்யாக எக்காலத்திலும் உள்ளது சான்றாக நரம்பு நளி, போன்ற சொற்கள் தொல்திராவிடத்தில் ஞகர மொழியினதாக இருந்திருக்க வேண்டும்; அவ்வாறே மலையாளத்திலும் காணப்படுகின்றன. இதனால்தான் பழந்தமிழிலும் ஞரல்~நரல், ஞால்-நால், ஞாண்—நாண், ஞெகிழ்—நெகிழ் போன்று ஞகர—நகர உறழ்ச்சி காணப்படுகின்றன

. தொல்திராவிடத்தில் ஆண்பாலுக்குரிய விகுதியாக கன் என்பதும் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும்.[17] அவ்விகுதி *சிறுக்கன், *முதுக்கன் என்ற இரு சொற்களிலும் பல மொழியிலும் காணப்படுகின்றன. *கிறுக்கன் என்பதுதான் பழந் தமிழிலும் மலையாளத்திலும் சிறுவன் என்று வந்துள்ளது. ஆனால், *முதுக்கன் என்ற சொல் மலையாளம் முதலிய மொழிகளில் காணப்பட, பழந்தமிழில் முதியன் என்று காணப்படுகிறது. திருக்குறள் 715-ஆம் பாடலில் முதுவர் என்ற பன்மை வடிவம் வந்துள்ளதால் அதற்கு இணையான முதுவன் என்ற வடிவமும் பயின்று வந்ததாகக் கொள்ளலாம். இங்கு கன் என்ற விகுதியின் வடிவம் வன் என்று பழந்தமிழ் காலத்திற்கு முன்னரே அஃதாவது தொல்வரலாற்றுக் காலத்திலே மாறி

விட்டது. முதியன் என்பது சிறு-சிறியன், பெரு-பெரியன் போன்று முது-முதியன் என்று ஒப்புமையாக்கத்தால் ஏற்பட்டிருக்கலாம். அல்லது துளு மொழியிலிருந்து கடன் வாங்கியதாகவும் இருக்கலாம்.

முன்னிலைப்பன்மை இடப்பெயரின் வேற்றுமை ஏற்கும் வடிவம் (Second person oblique) *நிம் என்று தொல் திராவிடத்தில் இருந்திருக்கவேண்டும்.[18] மலையாளத்தில் பழைய வடிவமே நிங்கள் என்பதுதான். அதனால் மலையாளத்திலும் தொல்திராவிடத்தின் வடிவமாகிய நிம் என்பது பாதுகாக்கப்பட்டுள்ளது எனலாம். ஆனால், பழந்தமிழில் வழங்கும் வடிவம் நும் என்பதே. இங்கு இகர உயிர் உகர உயிராக மாறியுள்ளது இம்மாற்றமும் தமிழுக்கே உரிய தனி மாற்றமாகும்.

அடிக்குறிப்பு

1. *Collected Papers on Dravidian Linguistics*, P. 156 [Annamalainagar, 1968].
2. P. S. Subrahmanyam, 'The Central Dradvidian Languages' in *Dravidian Linguistics [Seminar Papers]* P. 109, Eds. S. Agesthialingom and N. Kumaraswami Raja, Annamalainagar, 1969.
3. M. B. Emeneau 'The South Dravidian Languages' *JAOS*, 87. 370 [1967].
4. S. V. Shanmugam, 'Inflectional increment in Dravidian' in *Dravidian Linguistics Seminar Papers*, P. 53
5. Ibid. P. 51.
6. P. S. Subrahmanyam 'Gender–Number Categories in Dravidian' *The Annamalai University Journal*, 1969.
7. "Kodagu belongs more closely with the rest of South Dravidian than with Kannada with the proviso that in a few points, there are isoglosses that join Kodagu with Kannada" 'The South Dravidian Languages', P. 366.
8. Emeneau, M. B., 'The South Dravidian Languages, P 366.
9. Emeneau, M. B., '*India and Historical Grammar*', P. 21. [Annamalainagar, 1965].
10. S. V. Shanmugam, 'Tamil Numerals' *IATR*. 16.2.
11. Emeneau, M B., The South Dravidian Languages. P. 367.
12. T. Burrow, '*Collected Papers on Dravidian Linguisti* P. 41.
13. Ibid. 22f.
14. 'Post Nasal Voiceless Plosive in Telugu' in *Dravidian Linguistics [Seminar Papers]* P. 78.
15. S. V. Shanmugam, 'Tamil Numerals.'
16. S. V. Shanmugam, 'Gender-suffixes in Dravidian' (Forth-coming.)
17. S. V. Shanmugam, 'Gender-suffixes in Dravidian Nouns.'
18. Bh. Krishnamurthi, 'Personal pronouns in Dravidian' *Studies in Indian Linguistics [Prof. M. B. Emeneau Sastipurtti* Volume P. 204] [Poona and Annamalainagar, 1968]

சங்க இலக்கியங்களில் மிளிரும் விலங்கினப் பண்புகள்

திரு. புலவர். துரை. பிச்சை

நீர்சூழ்ந்த நிலவுலகத்தின்கண் தோற்றமெடுத்துள்ள உயிரினங்களை ஆறுவகையாகப் பாகுபடுத்தி, அவ்வவற்றிற்குரிய சீரிய பண்புகளையும், தன்மைகளையும், தெள்ளிதின் எடுத்தோதிய நீர்மையும், சீர்மையும், செம்மையும், வன்மையும், நுண்மையும் ஆழ்ந்த நுழைபுலமும் தண்டமிழர்க்கே உரியது. உலக நாகரிகம் தோற்றம் பெருததற்கு முன்பே பல்லாயிரம் யாண்டுகட்கு முன்பே தன்னேரிலாத் தமிழர் வாழ்வியலைத் தொல்காப்பியர் வகைப்படுத்திக் கூறிப்போந்தார். அக்கூற்று இற்றைநாட்டமிழர்க்கும், தமிழாராய்ச்சியாளர்க்கும், வேற்று நாட்டு, வேற்றுமொழி யாய்வாளர் தமிழாய்வுக்கும் காலக் கண்ணுடியாகத் திகழ்வதும் அந்நூலே. பிற வேறெம் மொழியினுள்ளும் காணற்கியலாததோர் பாகுபாட்டு முறையாகும்.

உயிர்வாழும் இனங்களை நீர்வாழ்வன-ஊர்வன-பறப்பன முதலான பாகுபாடுகளும். உயர்திணை, அஃறிணை எனவிரு பிரிநிலையும் தமிழர்க்கும், தமிழுக்குமே உரிய சிறப்புப் பண்புகளாகும் அவ்வுயிரினங்களுள் அஃறிணை உயிரினங்களைப் பற்றிய சிறப்பியல்புகளைக் கருவிற் றிருவுடைய பொய்யில் புலவர்கள் கூறிய கருத்துக்கள் பொன்னணிக் கிடையில் வைத்திழைத்த விலைவரம் பறியா நன்வைரமணி போல சங்க விலக்கியங்களிடையே மிளிர்கின்றன. அவ்வுயிரினங்களின் உயரியல்புகளை முற்றும் எடுத்தியம்பப்புகின் ஒல்லாது ஆதலின் ஒருசிலபாக்களில் அமைந்த இன்பம், துன்பம், ஊடலும்-கூடலும், அருட்பண்பாடு, விருந்தோம்பல், வாழ்க்கை முயற்சி என்ற துணைத் தலைப்புகளில் யானை, குரங்கு குருவி, செந்நாய், காக்கை, நாரை, எறும்பு முதலிய உயிரினங்களின் பண்புகளை ஒருவாறு எடுத்துக்காட்டுகின்றேன்.

இன்பம் — யானை.

மனித இனத்தைக்காட்டிலும் விலங்கினம் இணைவிழைச்சினில் பெருவேட்கையுடையது. அதிலும் யானை காதலுணர்வு மிக்கது. தன்னலமற்ற தன்மைதான்-அன்பின் முதிர்வு

தான் காதலின் உண்மைத் தன்மை, அதனைக் களிறுகளிடத்திற் காண்போம்.

ஆடவர்க்கு அறுசுவை உண்டி இட்டு அருகிருந்து அன்புடன் மகிழ்வதே அருந்தமிழ்ப் பெண்டிர் பண்பு — மரபு. ஆயின் காதல் மடப்பிடியை முன்னர் உண்பித்து, பின்னர் தானுண்டு மகிழ்வதே விலங்கினத்தின் அரிய பண்புபோலும்.

எழுவுறழ் தடக்கையின் எழில் வேழம், இனங்காக்கும் அழற்கண்வேழம் தன்காதல் மடப்பிடியொடும், துடிபோலும் அடியை யுடைய கன்றினொடும் கானம் புக்குச் செல்லுங்கால் நீர்வேட்கை மிக்கெழவே, காரற்ற காட்டிடை ஓரிடத்தில் சிறிதளவு நீர்காண, காணவே; களித்தோடிய கன்று குழிபடு நீரிலிழிந்து, தாயுந் தந்தையும் உண்ணவேண்டுமே யென ஓர்ந்து எண்ணாது கலக்கிடவே, கலக்கிய சின்னீரைக் களிறு முதற்கண் புறம் நின்ற பிடிக்கூட்டி பின்னர், தான் உண்டது. ஐயறிவு சான்ற யானை பிடியுண்டதைக் கண்டு கழிபேருவகை யுற்று, பிடியுண்ட எச்சில் நீரை யுண்டு பின்னும் மகிழ்வுற்றது. இத்தகைய அன்பார் வாழ்வும், பண்பும் அரிய சிறப்பியல்பு களும் செவ்விதில் இன்புறுத்தும் நிகழ்ச்சி யன்றோ?

" .. அக்காட்டுள்,
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே"
—பாலைக்கலி: கக.

துன்பம் — குரங்கு.

மக்கள் சமுதாயத்தில் கணவன் இறந்துழி, அவன் உயிரினைத் தேடிச் செல்வதுபோல் தன்னுயிர் துறந்து துறக்கம் புகுதற் றலையாய கற்பு இதனைக் கோப்பெருந்தேவியும், பெருங்கோப்பெண்டும் போல்வார் மெய்ப்பிப்பர். கணவன் ஆட்டனத்தியைப் பிரிந்த ஆதிமந்தி பேதுற்று ஆருயிர் நீத்த வரலாறும் சான்றுபகலும்

அத்தகைய கற்பு அஃறிணையுயிராகிய குரங்கினத்தில் இருந்தமை கண்டு கழிபேருவகை கொள்ளல் ஏற்புடைத்தேயாம்.

தனக்குரிய கடுவன் சாக்காட்டினை அடைந்ததாக, கணவனையின்றி ஒழுகுதலை விரும்பாது, கணவனால் விரும்பப்

பட்ட பெண்குரங்கு தன் தொழிலே இனி கற்க வேண்டாத வலிய குட்டியைச் சுற்றத்திடத்தே விட்டுத் தன் கணவன் வீழ்ந்துகிடக்கும் ஓங்கியுயர்ந்த மலையின் உச்சியிலிருந்து பாய்ந்து உயிர்செகுக்கும் தன்மையுடையது.

மக்களினத்தின் தோற்றமே குரங்கிலிருந்து தான் என்ற டார்வின் கொள்கை ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது கைம்மை தன்னை யுய்யாக் காமர் மந்தியின் அரிய பண்பு ஆறறிவு மிக்க மக்களினத்தில் உள்ளதைப்போல் காணப் படுதலே நோக்குதல் நன்று.

டார்வின் கொள்கையை மேலைநாட்டுப் பெரும் புலவன் *"சான்சனும்"* ஒப்புக்கொள்கின்றான்.

"கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும"

குறுந்தொகை. ௬௯

ஊடலும்—கூடலும்: — குருவி —

இல்வழங்கு மகளென மங்கை நல்லாள் வீற்றிருக்க அன்னவளுடன் அகமகிழ்ந்து அமராது புறமனை போதல் மரபு பைந்தமிழர் இலக்கண வரம்பும் வகுத்துள்ளனர். சங்க காலத்துப் பனுவல்களும் அறுவகைப்படட பிரிவுகளுள் பரத்தையர் பிரிவொன்றையுங் கூறுகின்றன. இப்புற வொழுக்கம் மக்களிடத்தன்றி குருவியிடத்தும் நிகழ்ந்துள்ளதைக் காண்பாம்.

குருவியொன்று தான் நாளும பயிலும் பெடைவிடுத்து, அயல்பெடையொடு பகல் விளையாடி, தழுவி தங்கி வந்தது. அதன் தீய பண்பினைத் தெள்ளென வுணர்ந்து தன்னின் குஞ்சுகளுடன் சூழ்ந்து கொண்டு குருவி உட்புகாதவாறு கடிந்து கத்துகிறது பெண் குருவி. அஞ்ஞான்று கருமை வான் பெருமழையைப் பொழிகின்றது ஆண் குருவி தன் தவறான செய்கைக்காக வெளியே மழையில் நனைந்து, குளிரால் நடுங்கிக்கொண்டு சோர்ந்து வாடி, வடிவிழந்து செய்த குற்றத்திற்கு மன்னிப்புக் கேட்பதைப்போல் காட்சி யளிக்கிறது.

இந்நிலை கண்டு மனம்பொறாத பெடை அருள் நோக்கோடு பண்டைக் காதல் நினைவுகளை நீடு நினைந்து நெகிழ்ந்து, தன்னிடத்து வருமாறு குரலெழுப்புகிறது. வியக்கும் வண்ணம் நயப்புறுத்தும் இக்குருவிகளின் ஊடலும்–கூடலும் அமைந்த வாழ்வியற்றிறனை யூன்றி நோக்கின்–அரிய பண்பியல்புகளை உட்புக்கு ஆராயப்புகின்–ஆறறிவு பெற்ற மக்கள் பண்பாட்டிற் கொப்ப வாழ்வியல்களும, பெற லரும் திறலுடைய கற்புடைப் பெண்டிரின் ஒழுகலாற்றிற் கேற்பவும் அமைந்துள்ளதென்பதைத் தெள்ளிதின் உணரலாம்

இக்குருவிக் குடும்பத்தினைக் குவலயத்திற் களிக்கும் பாடல்:

"உள்ளிறைக் குரீஇக் காரணற் சேவல்
பிறபுலத் துணையோ டுறைபுலத் தங்கி
வதிந்ததன் செவ்வி நோக்கப் பேடை
... .
கையற வந்த மையல் மாலை" —நற்றிணை: கஅக.

அருட் பண்பாடு: செந்நாய்

நாய் நன்றியுள்ள இனத்தைச் சார்ந்தது. அதன் இனத்தில் பண்பியல்புகளால், பிறவற்றால் சிறப்பிடம் பெறற் குரியது செந்நாயேயாம். செந்நாய் சீர்த்த பண்பும் நேர்மையும் செழுமையான அன்பும் தன்னகத்தே கொண்டது

ஒருகால் குட்டியினை ஈன்ற தன் பிணையொடு செந்நாய் மகிழ்ந்து செல்லுங்கால் ஆண்டு எதிரே மானொன்று தன் குட்டியொடு மகிழ்ந்தினிது விளையாடா நிற்றலைக் கண்டு, தானும் மகிழ்வெய்தி தன்பிணையின் பசிகளைய உணவாக்கிக் கொடுக்காது விடுத்துச் சென்றது அதனின் அருள்மேம் பாடுற்ற நெஞ்சத்தை உன்னி அகமகிழ்தற்குரியதேயாம்

தன்னின் பெரும்பெயர் பேராக்குட்டியிடத்தும், ஆராக் காதல் பிணையிடத்தும் வைத்த தீராக் காதலினால் அன்றோ தன் குடும்பத்திற்கு உணவாகக் கிடைக்கக்கூடிய மானின் சுற்றத்தைச் சூழ்ந்து, கொன்று தின்னாது சென்றது. செந் நாயின் சீரிய நாகரிகமும், தன் சுற்றம்போல் பிறசுற்றத் தினைப் பேணிய நயம்வந்த அன்புடைமையும், அரிய பண் பியல்பினையும் செப்பிடற் கெளியதோ ?

இப்பண்பாட்டுப் பெட்டகத்தை அறிவிக்கின்ற ஐங்குறு நூற்றுச் செய்யுளைக் காணுங்கள்.

"ஈர்ம்பிணவு புணர்ந்த செந்நா யேற்றை
மறியுடை மான்பிணை கொள்ளாது கழியும்"

—ஐங்குறு நூறு' ௩௫௪

விருந்தோம்பல் — காக்கை —

இனத்தோடு உண்பது காக்கையின் பண்பட்ட பண்பு பலவற்றோடு பகுத்துண்டு வாழ்வதானது 'பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல்' என்னும் நாகரிக நெறியை — அற நெறியைக் கைக் கொண்டொழுகுவாரது உயரிய—மேம்பட்ட இயல்பொடு வைத்தற்குரியது. நாளொரு மேனியும் பொழு தொருவண்ணமுமாக இயங்கக்கூடிய இற்றைநாட்குமுகாயத் துள் — மனித இனத்துள் காணப்படாததோர் சிறப்பியல்பு. அதனாலன்றோ காக்கையினைச் சிறப்பித்து மெல்லியல் நல்லா ராகிய நச்செள்ளையார் பாடினர் பாடி காககை பாடினி' என்னும் சிறப்படை மொழியையும் பெற்றார். மற்றும் சிறு காக்கை பாடினியாரொடு புலவர்கள் பலரும் பாடியுள்ளனர்.

காக்கை கரவாது கரைந்துண்ணும் இயல்பினதாகலின் அதன்கிளை யெல்லா வற்றிற்கும் வல்சியுணவு படைக்கும் பண்பார் பெரும் புலவர் ஓவாப் புகழார் — மூவா முத்தமிழ் தேர்ந்தார், தாவா நல்லியல்பார் ஓதலாந்தையார் பண்பு அதனினும் பெரிதுகாண்! அதனினும் பெரிதுகாண்!

வாழ்க்கை: — நாரை — [வெள்ளாங் குருகு]

மக்கள் குமுகாயத்துள் மாண்டவர்கட்கு இறுதிக் கடன் கள் இயற்ற உறவுடையோர் செல்லல் பழக்கம். அங்கு அமைதியும், ஆற்றாமையும், இரங்கலும், புலம்பலும், அவலத் தால் ஆர்த்தலும் எவ்விடத்தும் மலிந்து காணப்பெறும். குலத்தில் ஒருவரை இழந்துவிட்டோமே — நம்மின் சுமை யைத் தாங்கிக்கொண்டிருந்தவருள் ஒருவரை இழந்து விட்டோமே என ஆற்றாது அழுது புலம்புவோர் நிலம் பதைக்கும் வண்ணம் மார்புமேலும், தலையின்மேலும் அடித் துக்கொண்டு அரற்றுவர். அவலக் கவலையால் கையாறெய்திக் கலங்குவர். இஃது பண்டும் உலகத் தியற்கை ஆறறிவு

படைத்த அறிவுடையோர் மாட்டே இந்நிகழ்வு நிலவக் கூடியது. ஆயின் ஐயறிவுடைய பறவையினமான நாரை யிடத்தில் இப்பண்பு இருத்தல் கண்டு வியந்து அப்பாடலை மனத்துள் நிறுத்துதல் வேண்டும்

அருந்தமிழாற்றலில் அறிவு சான்றிடும் அம்மூவனார் என்னும் புலவர் பெருமகனார் மக்களின் பண்புகள் அனைத்துங் கொண்ட நாரையினை நானிலத்தில் நிலவ விடுகின்றார்.

வெள்ளாங் குருகிற்குப் பிள்ளையொன்று பிறக்க, இன மான பறவைகளெல்லாம் மகிழ்கிறது. மகிழ மகிழப் பிறந்து வளர்ந்த பிள்ளை யொருநாள் யெல்லாம் நெகிழ நெகிழப் பிரிந்து இறந்துவிடுகிறது இறந்துவிடவே துறந்த பிள்ளையை நினைத்து நாளும் வருந்துகின்றது.

குடும்பஞ் சிறக்க இருந்த பிள்ளை இறக்கக் கண்ட நாரை துன்பம் பொறுக்கமாட்டாமல், உயிர்துறக்கவெண்ணி பதை பதைத்துச் சிறகுகளை யடித்துக்கொண்டு அரற்றுகின்றது— ஆரவாரிக்கின்றது, இங்கும் அங்கும் சுழன்று சுழன்று அரற்றுகிறது— அடித்துக்கொள்ளவே உடம்பினின்று செம் புள்ளிகளையுடைய சிறகுகள் அகன்றுவிடுகின்றன. பிற்றை ஞான்று சிறுபொழுதில் செயலற்றுவிழுகிறது. பிள்ளைப் பற்றுப் பெரிதுடைய நாரையின் செயல் நயஞ்சான்ற பொரு ளுடையது!

"வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநாரை .....";
"நாரை; பதைப்ப ததைந்த நெய்தல்";
"நாரை; பதைப்ப வொழிந்த செம்மறுத் தூவி"

—என்று ஐங்குறு நூற்றுப் பாடல் அழகாக நாரையின் பண் பியல்புகளைப் பகர்கின்றது.

முயற்சி — எறும்பு —

மக்களிடம் காணப்படாததோர் மாண்புமிகு பண்பு, எறும் புகளிடம் காணப்படுதல் கண்டு நாணப்படுதல் வேண்டியது மக்களின் பண்பாகும்.

அவைகள் சாரை சாரையாக ஊர்ந்து செல்லுங் காட்சியே காட்சி! அதற்கு அவைகளின் ஒற்றுமையே சாட்சி! யாடு

மாடுகள்போல், அறிவற்ற மக்களினம்போல், பலவழிகளின்றிப் புகைத் தேரூர்திபோல் ஒரே வழியாக—நேர்வழியாக முறையாக—செறிவாக ஊர்ந்து செல்லுதலே ஒற்றுமையை உலகுக்கு எடுத்துக்காட்டும் ஒப்பற்ற பாடமாகும்.

முயற்சியுடன் உணவுள்ள இடத்தினை மூக்குணர்வால் உணர்ந்து கூட்டுறவு உணர்ச்சியுடன் தேட்டமுடன் சென்று, ஈட்டமுடன் வாயில் ஈர்த்துக்கொண்டு, நாட்டமுடன் தன்னுடைய நல்லளையில் சேர்த்து எதிர்கால வாட்டத்தைப் போக்கிக் கொள்ளும் நற்பண்பு தன்னை மனித இனத்தில் ஒவ்வொருவரும பின்பற்றத்தக்க - பின்பற்றவேண்டிய சிறந்ததோர் பண்பியல்பாகும் இதனைப் புறநானூறு புகல்கின்றது கேண்மின்.

"முட்டை கொண்டு வன்புலம் சேரும்
சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்ப"
— புறநானூறு : கஎங.

முடிவுரை

செல்லுறழ் தடக்கை மதவேழம் தன்னருமை மடப்பிடிக்கு நீருட்டி நின்று பெயர்ந்தபெரும் பேரன்பும்; கடுவன் இறந்த ஞான்று காமர்மந்தி தன்வன்பறழை ஒக்கலொடு சேர்த்துத் தொய்யாவுலகத்தின்பம் ஒழித்து இயற்கை பெய்தியதூஉம்; வேற்றிடம் புகுந்துவந்த குருவியை வெகுண்டு சிறிதே ஊடல் கொள்ள, அஞ்ஞான்று இயற்கை விளைத்த துன்பத்திற்கு ஆற்றாது, அல்லலுற்ற நிலைகண்டு, ஊடல் ஒழித்து, கூடல் விழைந்து, நாடல் கொண்டு நின்றதூஉம்; செந்நாய் தன் ஆராக் காதல் பிணையிடமும், பிள்ளையிடமுங் கொண்ட தீரா பேரன்பால் எழுந்த ஓரா அருண்மேம்பாடு எழுந்ததூஉம்; காக்கை இரைந்து கரைந்து சுற்றம் சுற்றஞ் சூழ உண்டு களிக்கும் உயர்பண்பும்; குடும்பஞ் சிறக்க இருந்த பிள்ளை இறக்கக்கண்டு ஆற்றாது அரற்றி அல்லலில் உழன்ற வெள்ளாங்குருகின் இனப்பற்று மிக்கதூஉம்; மக்களிடையில்லா மாண்புமிகு வினவொற்றுமையும், ஊக்கமுடைமையும் ஒருங்கேகொண்ட எறும்பினது எழிலார் பண்பும் எண்ணுந்தோறும் கண்ணுறுந்தோறும் எடுத்தியம்பவியலா எண்ணச் சுழல்களைத் தோற்றுவிக்கும் அரிய-இயற்கைப்பண்புகளாகும். இவைபோல்வனவாகிய பல்வேறு பண்பியல்புகளைச் சங்கவிலக்கியக் கடலிடை மூழ்கித் திளைத்துச் சுவைத்து இன்புறுக.

——

வெளிவராத கல்வெட்டுகள்

(திரு. வித்துவான். தி. அடிகளாசிரியர்.)

நம் நாட்டின் வரலாறு உண்மையாக எழுதப்பட வேண்டும். அதற்குக் கருவியாக இருப்பவைகளுள் கல்வெட்டும் ஒன்ருகும். அரசியலார் இன்றியமையாத கல்வெட்டுக்களையே படியெடுத்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் வெளியிடாதவை இன்னும் பல உள்ளன கல்வெட்டறிஞர் முயன்று அவற்றைப் படியெடுத்து வெளிப்படுத்த வேண்டும்

தென்ஞர்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சிவட்டத்திலுள்ள குகைநூர் என்னும் கூகையூரில் பல திருக்கோவில்கள் உள்ளன. அவற்றுள் வெள்ளாற்றின் வடக்குக் கரையிலே உள்ள திருக்கோவிலுக்கு இப் பொழுது சித்தர் கோவில் என்று பெயர் முன்னே அக் கோவிலுக்குத் தேவர்கள் தம்பிரான் திருக்கோவில், பஞ்சாட்சரநாதர் திருக்கோவில் என்று பெயரிருந்ததாகத் தெரிகிறது அக் கோவிலிலுள்ள கல்வெட்டுக்களை எடுத்து வெளியிடுகிறேன்.

இருக்குமிடம்: கருவறையின் மேற்புறச் சுவர்.

அரசன்: அச்சுததேவ மகாராயர்

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமன் மகா மண்டலேஸ்வர ஹரிஹர ராய வம்ஸ வீர பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் மூவராய கண்டன் கண் | ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடா தான் கஜதவேட்டை கண்டருளிய) விபாட வீரகம்பள
2 வியங்கர பூர்வ தட்சிண பச்சி மோத்தர சது சமு | த்திராதி பதி ராஜாதி ராஜ ராஜ பரமேஸ்வரன் ஸ்ரீமது வீரபிரதாபன்
3 அச்சுததேவ மகாராயர் பிருதிவிராஜ்யம் பண்ணியருளா | நின்ற சகாப்தம் (1453) இதன்மேற் செல்லாநின்ற விஜய ஸம்வத்ஸரத்து கும்பநாயிற்று பூர்வபட்சத்துப்
4 பௌர்ணமியும் ஸோ | மக்ரகண புண்ய காலமும் மக நட்சத்திரமும் குரு வாரமும் பெற்ற மகா நட்சத்திரத்து நாள் தென்கரைக் கூகையூர் தேவர்கள் தம்பிரானுக்கும்
5 பஞ்சாட்சர நாதர்க்கும் ஜனஞத வளநாடு மகுதை மண்டலம் தென்கரை நாட்டவர் ஆய்யஞக கெயூன திரு முன்னு தென்கரை நாட்டவருக்குப் புண்ணியமாக மலாடா

6 கிய ஜனநாத வளநா ட்ட மல மகுதைமண்டலத்தில் தென்
கரை நரையூர்க் கூற்றத்து ஆன மட்டை பானூர் நஞ்சை
புஞ்சை நான்கெல்லைக் குட்பட்ட நத்தம் தேய்த்தலே திடர்
மாவடை குளவடை சார்வடை ஏர்க்கடமை பெ ற கடமை
பணிக்கடமை தறிக்கடமை வாசல் மனைக்காசாயம் ஆயம்
தலையாரி கமநாட்டவரா பமவரி? வரி தீவளிகை திரைச்
சீலை மகாநவமி முறி நல்லெருது நற்பசு தோலொட்டு
8 சேரிவரி மற்று | ம் எப்பேர்ப்பட்ட பல உபாதியும் இந் நயி
னூர்க்குச் சர்வமானியமாகக் கல்லிம் செம்பிலும் குடுத்த
பட்டையம் வெட்டிக் குடுத்தோம் இந்த வூர் நான்கெல்லை
9 யும் குறி சூலத்தாபனமும் பண்ணிக் குடுத்து னை | க்கு
(நாம் தேவர் தம்பிரான் நாதர்க்கும் பஞ்சாட்சர நாதர்க்கும்
சோமக்ரகண புண்ணிய காலத்திலே ஸஹிரண்யோதக
பூர்வகமாக தாரை வார்த்துக் குடுத்தோம். இந்த பூ தர்மம்
10 சந்திராதித்தவரை நடக்கக் கடவதாகவும் | இந்தத் தர்ம
பரிபாலனம் பண்ணினவன் (முடியவில்லை)

இக் கல்வெட்டு பதினொரு வரியில் எழுதப்பட்டுள்ளது, கடைசியில் சிறு பகுதி முடியவில்லை. அச்சுத தேவ மகாராயர் ஆண்ட சாலியவாகன சகம் 1453க்குச் சரியான கி பி 1531ல் நிகழா நின்ற விசய யாண்டு மாசித்திங்கள் பௌர்ணமி திதியும் மகநாளும் சந்திர கிரகணமும் கூடிய நாளில் ஜனநாத வளநாடாகிய மகதை மண்டிலம் தென்கரை நாட்டதிகாரியின் திருமுன்பில் தென்கரை நாட்டுக் குடிமக்கள் எல்லோருக்கும் புண்ணியமாக அதே நாட்டில் நரையூர்க் கூற்றத்தி லிருக்கும் மட்டைபானூர் என்னும் ஊரினைச் சர்வ மானியமாகத் தேவர்கள் தம்பிரானுக்கும் பஞ்சாட்சர நாதர்க்கும் மேற்படி நாட்டவர் தாரைவார்த்துக கொடுத்தனர்" என்னும் செய்தி இக் கல்வெட்டிற் கூறப்பட்டுள்ளது.

இக் கல்வெட்டிற் கண்ட தேவர்கள் தம்பிரான் என்பவர் பஞ்சாட்சரநாதர் திருக்கோவிலைப் புரந்துவந்த வீரசைவ திருமடத் தலைவராவார். மற்றொரு கல்வெட்டில் இக் கோவில், தம்பிரான் கோவில் என்றே வழங்கப்பட்டுள்ளது. தென்கரைநாடு என்பது வட வெள்ளாற்றின் (நிவா என்று சேக்கிழாரால் குறிக்கப்பெற்ற யாறு' தென் கரையிலுள்ள நாடாகும். அப் பகுதி பழங்காலத்திலே மலையமான்நாடு

(மலாடு அல்லது மிலாடு) என்றும், பிற்காலச் சோழர் காலத்திலே சனநாத வளநாடென்றும் வாணகோவரையர்கள் ஆண்ட காலத்தே மகதை (மருதை) மண்டிலமென்றும் வழங்கி வந்தது

மேற்படி கோவிலின் மகாமண்டபத்தின் தென்புறச் சுவரில் உள்ளது.

ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீமன் மஹாமண்டலேஸ்வர மூவராயர் கண்டன் ராஜாதி ராஜ ராஜ பரமேஸ்வர கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு குடாதான் சதுசமுத்திராதிபதி எம்மண்டலமும் கொண்டருளிய புஜபல வீரபிரதாபன் **ஸ்ரீ கிருஷ்ண தேவ** மஹாராயர் ஸ்ரீமன் குமாரர் திருமலை தேவ மஹாராயர் பிருதிவிராஜ்யம்பண்ணி அருளாநின்ற சகாப்தம் (1446) இதன்மேற் செல்லாநின்ற தாரண ஸம்வத்ஸரம் துலா

1 நாயிறு அமரபட்சத்து ஏகாதெசியும் | சோமவாரமும் பெற்ற அத்தநாள் மலாடாகிய ஜநநாதவளநாட்டு மகதை மண்டிலத்துத் தென்கரை நரையூர்க் கூற்றத்துகூகையூரவன் தம்பிரான் கோயில் தேவர்கள் தம்பிரான், பஞ்சாட்சரநாதன் மகபூசைத் திருப்பணிக்கு ஸ்ரீமது மிருத்யஞ்செய நாயக்கரும் நாட்டவரும் கிருஷ்ண தேவ மகாராயருககுப் புண்ணியமாகவும், சுகாமி (சுவாமியா ?) திருமலை நாயக்கர் அய்யனுக்குப் புண்ணியமாகவும் இந் நாயனுர் மகபூசைத் திருப்பணிக்குவிட்ட **தேவதானம்** இம் மண்டலத்தில்

2 இப்பற் | பிடாகை உறத்தூருக்குக் கீழ்பாற்கெல்லை சிறுநிலா எல்லைக்கும் மேற்கு, தென்பாற்கெல்லை நெற்குணத்தின் எல்லைக்கும் வடக்கு, மேல்பாற்கெல்லை புன்னநல்லூர் எல்லைக்குங் கிழக்கு, வடபாற்கெல்லை நூற்றுவெட்பூர் எல்லைக்கும் தெற்கு இந் நான்கெல்லைக்குட்பட்ட நஞ்சை புஞ்சை மாவடை மரவடை குளவடை ஏர்க்கடமை பெறகடமை தறிக்கடமை நல்ல எருது நற்பசு நற்கடா

3 நல்லெருமை கொணயை | விரி முட கொணக்கை கட்டாயம் நாட்டு வெச்சம் ஆயம் தலையாரி கம்மாதம் மற்றும் எப்பேர்ப்பட்ட அனைத்தாயங்களும் இந் நாயனுர் பூசைத் திருப்பணிக்கு சர்வ மாணியமாக சந்திராதித்தவரையும் நடக்கக்கடவதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் குடுத்து உறத்தூரிலும் நான்கெல்லையிலும் சூலத்தாபனம் பண்ணிக் கொடுத்தோம். இந்தத் தருமம் அகுதம் பண்ணினவன் கெங்கைக் கரையிலே பிரம்மகத்தி

கோகத்தி அசுவகத்தி பண்ணினவன் புக்க | நரகம் பூதக் கடவனுக்கும் உ மகேஸ்வர ரட்சை. ஸ்ரீமது மிருத்யுஞ் செயன் எழுத்து. நாட்டவர் பணியால் மகத நாட்டு 5 வேளான் எழுத்து உ | |

இக் கல்வெட்டு கிருஷ்ண தேவராயர் புதல்வன் திருமலை தேவ மகாராயர் ஆண்ட சாலியவாகனசகம் 1446க்குச் சரியான கி பி 1524ல் நிகழும் தாரண யாண்டு ஐப்பசித் திங்கள் அமரபக்கத்து ஏகாதசியும் அத்தநாளும் திங்கட் கிழமையும் கூடிய நாளில் எழுந்துள்ளது "மலையமான் நாடாகிய சனநாதவளநாட்டு மகதை மண்டிலத்துத் தென் கரை நரையூக் கூற்றத்தைச் சார்ந்த கூகையூரில் தம்பிரான் கோயில் தேவர்கள் தம்பிரான் பஞ்சாட்சரநாதன் மகபூசைத் திருப்பணிக்கு ஸ்ரீமத் மிருத்யுஞ்செய நாயக்கர் என்னும் அரசியலதிகாரியும், நாட்டவரும் கிருஷ்ண தேவராயர்க்குப் புண்ணியமாகவும், அவர் புதல்வன் திருமலை நாயக்கருக்கு புணணியமாகவும் உறத்தூர் என்னும் ஊரினைத் தேவதான சர்வமானியமாக விட்டுள்ளனர்" என்னும் செய்தி இக்கல் வெட்டாற் புலனாகிறது.

இக் கல்வெட்டிற் குறிப்பிட்ட உறத்தூர் திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டத்தில் சிறுநிலா விற்கும் மேற்கு, நெற்குணத்திற்கும் வடக்கு; புன்னைநல்லூர்க்கும் கிழக்கு, நூற்றுவெட்பூருக்கும் வடக்கே யிருந்தது. இப் பொழுது இவ்வூர் இருப்பதாகத் தெரியவில்லை நூற்றுவெட்பூர் என்பது நூற்றப்பூர், நூர்த்தப்பூர் எனத் திரிந்து வழங்குகிறது.

இக் கல்வெட்டிற் கணட மிருத்யுஞ்சய நாதர் என்பவர் திருமலை நாயக்கரிடம் காரியம் செய்பவராக இருந்தனர் என்னுஞ் செய்தி, இக் கோயிலிலுள்ள மற்றொரு கல்வெட்டாற் புலனாகின்றது இந்த மிருத்யுஞ்சயநாதருடைய உருவம் இக்கோவிலின் கோபுர வாயிற்படியின் இருபுறத்திலும் செதுக்கப்பெற்றுள்ளது இவர் கழுத்திற் சிவலிங்க தாரணம் காணப்படுகின்றது அதனால் இவர் வீரசைவ சமயத்தின ராவார்.

இக் கல்வெட்டில் மிகவும் இன்றியமையாததாய்க் குறிப் பிடத்தக்க செய்தியொன்று உள்ளது. கிருஷ்ண தேவரா யர்க்குத் திருமலை தேவ மகாராயர் என்ற புதல்வன் இருந்

தனன் என்பதும், அவன் ஆண்ட காலத்தில் கிருஷ்ண தேவராயர் உயிருடன் இருந்தார் என்பதும் "ஸ்ரீ கிருஷ்ண தேவ மஹாராயர் ஸ்ரீமன் குமாரர் திருமலை தேவ மஹாராயர் *பிருதிவிராஜ்யம் பண்ணி அருளாநின்ற"* "கிருஷ்ண தேவ மஹாராயர்க்குப் புண்ணியமாகவும் சுகாமி திருமலை நாயக்கர் அய்யனுக்குப் புண்ணியமாகவும்" என்னும் கல்வெட்டுப் பகுதிகளாற் புலனாகின்றன.

மேற்படி கோவில் மகாமண்டபத்தின் தென்புறச் சுவரிலுள்ள மற்றொரு கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமான் மகாமண்டலேஸ்வரன் மூவராயர்
கண்டன் ராஜாதிராஜ ராஜபரமேஸ்வர கண்டநாடு
1 கொண்டு கொண்ட | நாடு கொடாதான் சதுசமுத்ராபதி
எம்மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீஜ புஜபல வீர பிரதாப
2 ஸ்ரீகிருஷ்ண தேவ மஹாராயர் ஸ்ரீமத் குமாரர் திருமலை
தேவ மஹாராயர் பிருதிவி ராஜ்யம்பண்ணி அருளாநின்ற
3 சகாப்தம் (1446) மேல் செல்லாநின்ற தா | ரண
ஸம்வத்சரத்து தநுர் நாயிற்று பூர்வபட்சத்துப் பவுரையும்
திருவாதிரையும் பெற்ற ஆதித்த வாரத்து நாள் ஸ்ரீமத்
4 திருமலை | நாயக்கர் காரியத்துக் கடவர் மிருத்யுஞ்சய
நாயக்கரும் நாட்டவரும் கூகையூர் நயினார் தேவர்கள்
5 தம்பிரானார்க்கும் பஞ்சாட்சர நாத | ர்க்கும் தர்ம சாதனப்
பட்டயம் குடுத்தபடி மகதை மண்டலம் மலாடாகிய சென
6 நாத வளநாட்டு ஆறகழ் ஊர் சீர்மை | தென்கரை நரை
யூர்க் கூற்றத்து நீர்வார்த்துக் கொடுத்த புல்லங்குளம்
ஏரிக்குச் சேர்ந்த நிலத்தில் நயினார் தேவர்கள் தம்பிரா
7 னார்க்கு ஸஹிரண்யோதக பூ | ர்வமாகத் தாரைவார்த்துக்
குடுத்த குழி (600) கூகையூர் தம்பிரான் கோயில் பிற
வரிசம மாதம் வருஷம் ஒன்றுக்கு ஆயக்காரன் கொள்ளும்
8 பணம் இருபத் | து அஞ்சும் புஞ்சைக் குழி அறுநூறும்
இந்தப் பணம் இருபத்தைஞ்சும் இந்தத் தம்பிரானார்க்கு
தாரை வார்த்துக் கொடுக்கும்படியாலே சந்திராதித்த
9 வரையும் | அனுபோவித்துக் கொண்டருளக் கடவராகவும்.
இந்தத் தன்மத்துக்கு அகுதம் பண்ணினபேர் கங்கைக்
10 கரையிலே காராம் பசுவைக் கொன்றபாவமும் பிரம்ம |
கத்தி தோஷம் பண்ணின பாவத்திலும் போகக் கடவ
11 ராகவும் உ

கயமனார்

பாடலாற் பெற்ற சிறப்புப் பெயரா ?

(சாமி. பிச்சைப் பிள்ளை எம். ஏ., பி, எசி.,)

கயமனார் என்ற பெயர் பல கருத்து வேற்றுமைகளைக் கொண்ட பெயராகும். பலர் பலவாறாக அப் பெயருக்கு விளக்கம் தருகின்றனர்.

உ. வே. சா. அவர்கள் "பசிய இலையினின்றும் மேலெழுந்த நெய்தற் பூ கழியில் வெள்ளம் மிகும்போதெல்லாம் கயத்தின் கண்ணே மூழ்கும் மகளிருடைய கண்ணை யொக்குமென்று இவர் ஒரு செய்யுளிலே பாடுகின்றார். இது பற்றி இவா கயமனார் என்ற சிறப்புப் பெயர் பெற்றாரென்று ஊகிக்கப்படுகின்றது" எனக் குறிப்பிட்டுள்ளார் [1]

"உவமையால் பெயர் பெற்ற புலவர்களுள் கயமனாரும் ஒருவராவர்" என்றும்

---

1. குறுந்தொகை மூலமும் உரையும்—பக்கம் 114.
   உ. வே. சா. அவர்கள் பதிப்பு.

(257-ஆம் பக்க தொடர்ச்சி)

இக்கல்வெட்டு பதினொரு வரியில் எழுதப்பட்டுள்ளது கிருஷ்ணதேவ மகாராயர் புதல்வன் திருமலை தேவ மகாராயர் அரசாண்ட சாலியவாகன சாகம் 1446-இல் அஃதாவது கி. பி. 1524இல் இக் கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. திருமலை நாயக்கருடைய அரசியல் காரியத்துக்குரிய மிருத்யுஞ்சய நாயக்கரும் நாட்டவரும் தேவர்கள் தம்பிரானுக்கு (இவர் கோவிலைப் பாதுகாத்துவந்த வீர சைவ திருமடத் தலைவர்) பஞ்சாட்சர நாதர்க்கும் தர்ம சாசனப் பட்டயம் கொடுத்த செய்தியை இது கூறுகிறது.

மலையமான் நாடென்றும் செனநாத வளநாடென்றும் கூறப்படும் மகதை மண்டலத்தில் ஆறகழூர்ச் சீமையில் அடங்கிய தென்கரை நரையூர்க் கூற்றத்தில் உள்ள புல்லங்குளம் என்னும ஊரில் உள்ள ஏரிக்குச் சேர்ந்த நிலத்தில் அறுநூறு குழி நஞ்செய் நிலத்தையும் ஆயக்காரன் பணம் இருபத்தைந்தையும் மேற்படி தம்பிரானுக்கும் பஞ்சாட்சர நாதர்க்கும் தர்மமாகக் கொடுத்ததாக இக்கல்வெட்டுச் சொல்லுகிறது.

இக் கல்வெட்டு மிருத்யுஞ்சய நாயக்கரை "திருமலை நாயக்கருடைய காரியத்துக் கடவர்" என்று குறிப்பிடுகிறது.

"பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீ னிருங்கழி யோதம் மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்" — என்ற
உவமையே அதற்குச் சான்று என்றும் புலவர் கோவிந்தன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.[2]

மேலும் மு. வ. அவர்களும் இக்கயமனார் எனும் பெயர் புலவரின் இயற்பெயராயிராதென்றும் குறுந்தொகை (9) பாடலில் வரும் ஒரு காட்சியே இப்பெயர் தந்திருக்கவேண்டுமென்றும் உய்த்தறிய இடமுள்ளது என்று குறிப்பிடுகின்றார்[3]

இவர்கள் குறிப்பிட்டது போல் கயமனார் என்பது சிறப்புப் பெயரா உவமையாற் பெற்ற பெயரா என்பதை நாம் ஆராய்தல் வேண்டும் அதை ஆராயப் புகுமுன் சங்க காலத்தில் சிறப்புப் பெயர் கொடுப்பதன் அடிப்படையை நாம் அறியலாம். அவ்வடிப்படை நம் கயமனாருக்கும் பொருந்தி வருகிறதா? எனவும் காணலாம்.

ஓலைச் சுவடிகளில் சிதறிக்கிடந்த சங்கப் பாடல்களை முதலில் தொகுக்கப் புகுந்த தொகுப்பாளன் ஒவ்வொரு பாடலையும் எடுத்தெழுதி அவ்வப் பாடல்களின் அடியிற்கண்ட புலவர்களின் பெயரால் அவற்றைத் தொகுத்தான் அப்படித் தொகுத்துக்கொண்டு வரும்போது சில பாடல்கள் புலவர் பெயர் இன்றியோ அல்லது செல்லரித்தோ காணப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு புலவர் பெயர் இல்லாத அல்லது தெரியாத பாடல்களையெல்லாம் தொகுத்து அதற்கு ஏதோ சில அடிப்படைகளில் தொகுப்பாளன் புதுப்பெயர் கொடுக்கலானான்.

அங்ஙனம் பெயர் கொடுக்கும்போது சிறப்பான வருணனையைக் கொண்டும், சிறப்பான உவமையைக் கொண்டும், சிறப்பான சொல்லாட்சியைக் கொண்டும் புதுப்பெயர்களைத் தொகுப்பாளன் கொடுத்திருக்கக்கூடும்.

---

2. சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை—2 பக்கம் 25.

3. "There is room to infer that 'Kayamanar' is not the poet's name and that is derived from the arresting simile in which the neytal flowers tossed by the waves in the back water are compared to the eyes of ladies bathing in a tank.
—The treatment of nature in Sangam literature—Page 165.

புலவர் பெயர் இல்லாத நிலையில் மலையைச் சிறப்பாகவும் புதுமையாகவும் வர்ணித்துள்ள பாடலைக் கண்ட தொகுப்பாளன் அப்பாடலைப் பாடிய புலவருக்கு[1] 'மலையனார்' என்று பெயரிட்டான் இதுவே வருணனையாற் பெற்ற பெயராகும். அவ்வருணனை

"பிரசந் தூங்கப் பெரும்பழந் துணர
வரைவெள் ளருவி மாலையி னிழிதரக்
கூலமெல்லாம் புலம்புக நாளும்
மல்லற் றம்மஇம் மலைகெழு வெற்பென"...

என்பதாம் (நற்றிணை — 93)

"ஊட்டியன்"[4] "வில்லக விரலின்",[5] "தேய்புரிப் பழங் கயிறுபோல"[6] "செம்புலப்பெயனீர் போல"[7], என்ற உவமைகளை, புலவர்பெயர் தெரியாப் பாடல்களில் கண்ட தொகுப்பாளன் முறையே புலவர்கட்கு ஊட்டியார், வில்லக விரலினார், தேய்புரிப் பழங்கயிற்றினார், செம்புலப் பெயனீரார் என்று பெயர் வைக்கலானான்.

'நெடுவெண்ணிலவு'[8] 'தொடித்தலை விழுத்தண்டூன்றி'[9], என்ற சிறப்பான சொல்லாட்சியைப் புலவர்பெயர் தெரியாப் பாடல்களிற் கண்ட தொகுப்பாளன் முறையே 'நெடுவெண்ணிலவினார், தொடித்தலை விழுத்தண்டூன்றினார் எனப் பெயர் வைக்கலானான்.

இங்ஙனம் சிறப்புப் பெயர் பெற்ற புலவர்களின் பெயரில் ஒவ்வொரு பாடலே அமைந்திருக்கும். ஆனால் ஒரு பாடலில் கண்ட உவமை வேறு பாடல்களிலும் (அவையும் புலவர் பெயர் தெரியாப் பாடல்களாக இருக்கவேண்டும்) காணப்பட்டால் அவற்றையும் அப்புலவர் பெயரில் தொகுப்பாளன் தொகுத்திருப்பான் உதாரணமாக ஊட்டியாரை' எடுத்துக் கொள்ளலாம் சிறப்புப்பெயர் பெற்ற புலவர்களில் இவர் மட்டுமே இரண்டு பாடல்களுக்கு ஆசிரியர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

(தொடரும்)

4. அகநானூறு—68, 388. 5. குறுந்தொகை—370. 6. நற்றிணை 284.
7. குறுந்தொகை—40. 8. குறுந்தொகை—47. 9. புறநானூறு—243.
குறிப்பு:— I இவர் முள்ளூர் மலையை ஆண்ட மலையமான் குடியிற் பிறந்தவர். என்றும் சிலர் கூறுவர் (ஆசிரியர்).